


**12.08.2024**

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளின் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

2. கைத்தறி கைவினை பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு முனைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

3. போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழி மத்திய சமூக நீதி அதிகாரம் அளிப்புத்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தலைமையில் இன்று புதுதில்லியில் ஏற்கப்பட்டது.

4. தமிழ்நாட்டில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

5. நீலகிரி கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்றும் நாளையும் கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

**********

பிரதமர்

வேளாண் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளின் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி பூஷா வேளாண் பல்கலைகழகத்தில் அதிக மகசூல் தரும் 109 புதிய ரக பயிர்களை வெளியிட்டதன் ஒருபகுதியாக விவசாயிகளிடையே

கலந்துரையாடிய அவர் வேளாண் துறையில் படைப்பாற்றல் திறனுக்கு வழங்கிய முக்கியத்துவத்தின் பயனாக இந்த புதிய ரகங்கள் உருவாக்கப்பட்டதாக கூறினார்.

விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக கூறிய அவர் புவி சார் நலத்தில் தத்தம் பொறுப்பை விவசாயிகள் உணர்ந்திருப்பதால் இயற்கை வேளாண்மையில் அவர்கள் ஈடுபடுவார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் புதிய ரக பயிர்களை முதலில் சிறிய அளவில் பயன்படுத்தி அவை திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து பயன்படுத்த அறிவுறுத்தினார்.

தமது 3ஆவது ஆட்சி காலத்தில் மும்மடங்கு வேகத்துடன் பணியாற்ற உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

**********

மன்-கி-பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 113ஆவது முறையாக வரும் 25ஆம் தேதி உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பொதுமக்கள் 1800 11 7800 என்ற கட்டணமில்லா எண்ணிலும்,

**mygov** இணையதளத்திலும் வரும் 23ஆம் தேதிவரை தெரிவிக்கலாம்.

**********

கிரிராஜ்சிங்

கைத்தறி மற்றும் கைவினை பொருட்களின் ஏற்றுமதியையும் உள்நாட்டு விற்பனையையும் அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி ஜன்பத்தில் கைத்தறி கண்காட்சியை இன்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனத்துடன் கைத்தறி நெசவாளர்கள் தற்போது இணைக்கப்பட்டுள்ளதால் நவீன வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

புதிய வடிவமைப்புகள் டெனிம் சில்க் உள்ளிட்ட நவீன ரகங்கள் தற்போது அறிமுகம் செய்யப்பட்டதை அடுத்து இளையோரிடையே கைத்தறி பிரபலமாகியுள்ளதாக கூறினார்.

ஒட்டுமொத்த கைத்தறி பிரிவில் நம் நாட்டிற்கு 90 சதவிகித பங்குகள் உள்ளதாக தெரிவித்த அமைச்சர் 35 லட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இத்துறையில் பணியாற்றுவதாக குறிப்பிட்டார்.

ஹர் கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தின் ஒருபகுதியாக கைவினைஞர்களுக்கும் நெசவாளர்களுக்கும் தேசிய கொடிகளை வழங்கிய திரு.கிரிராஜ்சிங் இந்த இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

**********

போதைபொருள் - வீரேந்திரகுமார்

புதுதில்லியில் போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழி மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளிப்புத்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தலைமையில் இன்று ஏற்கப்பட்டது.

போதை பொருள் பயன்பாடில்லாத வளர்ச்சி அடைந்த பாரதம் என்பதை கருப்பொருளாக கொண்டு இத்தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்த இயக்கத்தில் 11 கோடி மக்கள் போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிராக உறுதிமொழி எடுத்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

மத்திய அமைச்சகங்கள், பள்ளி கல்லூரி பல்கலைகழக மாணாக்கர், தேசிய மாணவர் படையினர் நேரு யுவகேந்திரா அமைப்பு உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புகள் இணையதளம் மூலம் இன்று உறுதிமொழி ஏற்றதாக அவர் கூறினார்.

2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி மத்திய சமூக நீதி அமைச்சகம் சார்பில் போதை பொருள் பயன்பாட்டிற்கு எதிராக உறுதி மொழி ஏற்பு இயக்கம் தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**********

முதலமைச்சர் - போதைபொருள்

தமிழ்நாடு காவல்துறை சார்பில் சென்னை பல்கலைகழகத்தில் நடைபெற்ற போதை பொருள் இல்லா தமிழ்நாடு நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

போதை பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிரான உறுதிமொழி இதில் ஏற்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் காணொலி வாயிலாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்ற காணொலி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரதீப்குமார், மாநகர காவல்துறை ஆணையர் திருமதி.காமினி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசுகையில்:

வாய்ஸ்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி தலைமையில் மாணாக்கர் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.

நெல்லை டவுன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் தலைமையில் மாணாக்கர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

திருவாரூர் அரசு உதவிபெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

வேலூரில் பள்ளி மாணாக்கர் பங்கேற்ற போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி தொடங்கிவைத்தார்.

நாமக்கல் காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பள்ளி மாணாக்கர் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**********

ஹர்கர் திரங்கா

சுதந்திர தின பெருவிழாவை ஒட்டி ஹர்கர் திரங்கா இல்லந்தோறும் தேசிய கொடி இயக்கத்தை முன்னெடுத்துச்செல்லும் வகையில் நாட்டின் அனைத்து அஞ்சல் நிலையங்களிலும் தேசிய கொடி விற்பனை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் தேசிய கொடியை வாங்கி இல்லங்களில் தேசிய கொடியை ஏற்றிவருகின்றனர்.

தேசிய கொடியுடன் கூடிய தங்களின் செல்ஃபி படங்களையும் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்து வருகின்றனர்.

தேசிய கொடியை ஏற்றுவது பெருமை அளிப்பதாக உள்ளது என்று மக்கள் தெரிவிப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

தூத்துக்குடியில் பள்ளி மாணாக்கர் தேசிய கொடியை ஏந்தியவாறு பத்மாசனத்தில் 78 வினாடிகள் அமர்ந்தவண்ணம் யோகாசன நிகழ்வில் பங்கேற்றனர்.

இதனை தொடர்ந்து தேசபக்தி பாடல்களும், தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

20க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் உலக சாதனைக்காக இந்த யோகாசன நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டதன் மூலமாக தேசப்பற்று மேலும் அதிகரித்துள்ளதாக பள்ளி மாணவி தெரிவிக்கையில் :

வாய்ஸ்

**********

முதலமைச்சர் - மாநகராட்சி

தமிழ்நாட்டில் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 192 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்ட பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

திருவண்ணாமலை நாமக்கல் புதுக்கோட்டை காரைக்குடி நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டதையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

**********

பீகார்

பீகார் மாநிலம் ஜெகன்னாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள பாபா சித்தேஷ்வர்நாத் திருக்கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 7 பக்தர்கள் உயிரிழந்தனர்.

காயமடைந்த 16 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த திருக்கோவில் வளாகத்தில், பக்தர்களுக்கும் உள்ளூர் வியாபாரிகளுக்கும் இடையே நேரிட்ட வாக்குவாதத்தை அடுத்து இந்த சம்பவம் நேரிட்டது.

இதனிடையே உயிரிழந்தோர் குடும்பத்திற்கு 4 லட்ச ரூபாய் நிவாரண உதவியையும்,

காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயையும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

**********

சர்வதேச யானைகள் தினம்

சர்வதேச யானைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் யானைகளை பாதுகாப்பதற்கான சமூக முயற்சிகளை பாராட்டியுள்ளார்.

நமது வரலாறு மற்றும் பாரம்பரிய கலாச்சாரத்துடன் யானைகள் இணைந்திருப்பதாக கூறிய பிரதமர் யானைகளுக்கு உகந்த வசிப்பிடத்தை உருவாக்கி தருவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

யானைகளின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

இத்தினத்தை ஒட்டி சட்டிஸ்கட் மாநிலம் ராய்பூரில் நடைபெறும் சுற்றுச்சூழல் நிகழ்ச்சியில் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்திர யாதவ் பங்கேற்கிறார்.

**********

இருவரி

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அன்னாவாசலில் மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம் நாளை நடைபெறுவதால் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டப்பட்ட, கல்வி நிறுவனங்கள் உரிய அனுமதி பெற, இணையதளம் வாயிலாக வரும் ஜனவரி 31ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகராட்சிக்குட்பட்ட மலையடிவார பகுதியில் அனுமதிபெறாமல் கட்டப்பட்ட 350 கட்டிடங்கள் உரிய ஆவணங்களை ஒருவாரத்திற்குள் சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாகம் நோட்டீஸ் வழங்கியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தண்ணீரின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு மின்னணு நடமாடும் வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சித்தலைவர் திருமதி சாந்தி மின்னணு விழிப்புணர்வு வாகனத்தை இன்று தொடங்கிவைத்தார்.

பெரம்பலூரில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மக்கள் தொடர்பகம் சார்பில் மக்கள் நல திட்டங்கள் குறித்த 2 நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி நாளை தொடங்குகிறது.

**********

மேட்டூர்

மேட்டூர் அணை அதன் முழுகொள்ளளவான 120 அடியை மீண்டும் எட்டியுள்ளது.

இதனையடுத்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளதால் காவிரி கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றிலும் நீர்வரத்து இன்று வினாடிக்கு 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

பரிசல் இயக்கவும், குளிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

**********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்றும் நாளையும் கன, மிக கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ராணிப்பேட்டை வேலூர் திருப்பத்தூர் திருவண்ணாமலை கிருஷ்ணகிரி தர்மபுரி சேலம் கள்ளக்குறிச்சி நாமக்கல் ஈரோடு திருப்பூர் கரூர்

திருச்சிராப்பள்ளி திண்டுக்கல் மதுரை தேனி தென்காசி மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

**********

மகளிர் கபடி லீக்

ஹரியானா மாநிலத்தில் உலகளாவிய மகளிர் கபடி போட்டிகள் அடுத்த மாதம் தொடங்குகின்றன..

15 நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

சர்வதேச அளவில் கபடியை ஊக்குவிக்கவும், ஒலிம்பிக் போட்டியில் இதை சேர்க்கவும், அரசின் நடவடிக்கைகளின் ஒருபகுதியாக இந்த போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

**********